05.02.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 20/2019**

அ.சா.10

பெயர். **முகமது ஷேரிப்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**ஜமாத்தில் நாட்டாமை என்ற ஒரு பதவி உள்ளதா என்றால் உள்ளது. ஜமாத்தில் முத்தவல்லியும், உறுப்பினர் குழுவும் தான் இருப்பார்கள் என்றால் முத்தவல்லியும் பட்டேலும் இருப்பார்கள். அதில் பட்டேல் என்பவரை தான் நான் நாட்டாமை என்று கூறுகிறேன். ஜமாத்தில் பிரச்சனை செய்தவர்களும், பிரச்சனையில் பாதிக்கப்பட்டவரும் முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால்தான் பஞ்சாயத்து செய்வார்கள் என்றால் பொதுவாக அப்படி தான். 2016 ல் புகார்தாரர் சம்சுதீன் தேர்தலில் போட்டியிட்ட போது எதிரி மோகனும், தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான். சம்சுதீன் ஏற்கனவே ஒரு முறை தலைவராக இருந்தார். இரண்டாவது முறை தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். அந்த சமயத்தில் தலித் சமூகத்திலிருந்து மோகனும் போட்டியிட்டார். தேர்தலில் இருவரும் போட்டியிட்டார்கள் என்ற விவரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை. இருவரும் தேர்தலில் போட்டியிட்டது தொடர்பாக முன்விரோதம் இருந்தது என்ற கோணத்தில் என்னிடம் காவல் துறையினரும் விசாரணை செய்யவில்லை. ( இரண்டாம் எதிரி தரப்பில் கேட்கப்பட்ட மற்ற கேள்விகளை 1, 4**

எதிரிகள் தமதாக ஏற்றுக்கொண்டனர்.)

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை.</u>**